ஒபாமா ஏற்படுத்தப் போகும் மாற்றம்



எழுபரிதி
(ஒரு பேப்பருக்காக)

இந்தத் தடவை ஒபாமா பற்றி எழுதலாம் என இருக்கிறேன் என நான் ***ஒரு பேப்பர்*** ஆசிரியர் குழுவிடம் தெரிவித்தபோது, வழமைக்கு மாறாக அவர்கள் மிகுந்த அசிரத்தையுடன் அதனை உள்வாங்கிக் கொண்டார்கள். 'இதைவிட்டால் வேறேதும் இல்லையா' என அவர்களில் ஒருவர் கேட்டும் விட்டார். அந்தளவுக்கு மக்களுக்கு சலிப்பை ஏற்படுத்தும் வகையில், கடந்த ஒருவாரத்திற்கு மேலாக ஒபாமா என்ற ஒற்றைச் சொல்லையே ஊடகங்கள் மீண்டும் மீண்டும் உச்சரிக்கின்றன. ஒபாமாவின் குடும்பத்தினரைக் கூட அவர்கள் விட்டுவைக்கவில்லை ஒருவர் விடாமல் தொலைக்காட்சித் திரைகளில் தோன்றுகிறார்கள்.

நான் இங்கு உங்களுடன் பகிர்ந்து கொள்ள விருப்பது ஒபாமா பற்றியது அல்ல, அவர் அமெரிக்காவிலும், அதன் வெளிநாட்டுக் கொள்கையிலும் ஏற்படுத்தப்போவதாகக் குறிப்பிடும் மாற்றம் (change) பற்றியதும் அல்ல. அவர் அமெரிக்க அதிபராகத் தெரிவுசெய்யப்பட்டமை என்ற ஒற்றைச் சங்கதி அனைத்துலக மட்டத்தில் ஏற்படுத்தியிருக்கிற, ஏற்படுத்தப்போகிற மாற்றம் பற்றிய சில அவதானிப்புகள் பற்றியே சிலாகிக்க விரும்புகிறேன்.

ஒபாமா அமெரிக்க அதிபராக அந்நாட்டு மக்களால் தெரிவு செய்யப்பட்டமை தொடர்பாக வேறுபட்ட கருத்துக்கள் வெளியிடப்பட்டு வருகின்றன. இவை அவரவர் அரசியல் நிலைப்பாடுகளைப் பிரதிபலிப்பதாக அமைந்துள்ளமை ஒன்றும் ஆச்சரியத்துக்குரிய விடயமில்லை. அதனால் அமெரிக்காவில் காணப்படும் சனநாயகத்தின் உச்சக்கட்ட வெளிப்பாடு இது என்பதிலிருந்து, உலகின் காவல்துறை அதிகாரி போன்று செயற்படும் அமெரிக்கா மற்றைய நாடுகளால் தனிமைப்படுத்தப்படுவதிலிருந்து காத்துக் கொள்ள அமெரிக்க மத்திய புலனாய்வு நிறுவனத்தினால் (CIA) நியமிக்கப்பட்டவரே ஒபாமா. தேர்தல், வாக்களிப்பு எல்லாமே மோசடி என்று முன்னையதை நிராகரிக்கும்படியான கருத்துக்கள் வரை அவை வேறுபட்டுச் செல்கின்றன.

எது எப்படியிருப்பினும் (ஆபிரிக்க - அமெரிக்க) கலப்பினத்தைச் சேர்ந்த ஒருவர், வரலாற்றில் முதல் தடவையாக, உலகில் அதிக வல்லமை பொருந்திய நாட்டின் தலைவராகியுள்ளார். அதனை மனதார விரும்பியோ விரும்பாமலோ உலகம் வரவேற்றிருக்கிறது என்பதே முதன்மையான விடயமாக அமைகிறது.

பிரித்தானியாவிலும், கனடாவிலும் கறுப்புப் பிரதமர்கள் தேர்ந்தெடுக்கப்படுவது எப்போது? ஜெர்மனியில் துருக்கிய வம்சாவளியினர் ஒருவர் சான்சலராக வரமுடியாதா? அல்ஜீரிய அகதி ஒருவர் பிரான்சின் தலைவராகும் நாள் வருமா?

இதில் முரண்நகை என்னவெனில் ஒபாமாவின் வெற்றியை தமது வெற்றியாகக் காட்டிக் கொள்ள ஒன்றுக்கொன்று முரணான தரப்புகள் முண்டியடித்துக் கொள்கின்றன. பாரம்பரியமான வலதுசாரிக்கட்சிகளும், இடதுசாரிக் கட்சிகளும் ஒபாமா விடயத்தில் தாராள வாதக் கொள்கைகளின் (Liberal policies) அடிப்படையில் ஒருமித்த கருத்துக்களை கொண்டுள்ளன என்பது சுவாரசியமான மாற்றம். இதனால் பிரித்தானிய பிரதமர் கோர்டன் பிரவுண் அவர்களும், எதிர்க்கட்சித்தலைவர் டேவிட் கம்ரோன் அவர்களும் கூட ஒபாமாவின் வெற்றியை தங்களுடையதாகக் காட்ட முற்படுகின்றனர்.

தமிழின அழிப்பில் தீவிரம் காட்டிவரும் சிறிலங்கா அரசதரப்பும் தன் பங்கிற்கு மகிழ்ச்சி தெரிவித்திருக்கிறது. முற்போக்குக் கருத்துக்கள் கொண்ட சிங்கள கல்வியாளர் ஐயதேவ உயாங்கொடவும், சிங்கள இன வாதியான தயான் ஐயதிலகவும் ஒபமாவின் வெற்றியையொட்டி தமது கருத்துக்களை வெளியிட்டுள்ளார்கள். தவிர்க்க முடியாமல் ஒபாமாவின் வெற்றியை சிறிலங்கா அரசியல் நிலவரத்துடன் ஒப்பிட வேண்டிய நிலமையை அவர்களுக்கு ஏற்படுத்தியுள்ளது.

கலப்பினத்தைச் சேர்ந்த ஒருவர், வரலாற்றில் முதல் தடவையாக, உலகில் அதிக வல்லமை பொருந்திய நாட்டின் தலைவராகி உள்ளார். அதனை மனதார விரும்பியோ விரும்பாமலோ உலகம் வரவேற்றிருக்கிறது என்பதே முதன்மையான விடயமாக அமைகிறது.

பேரினவாதிகளையும், இனத் துவேசிகளையும் சுயவிசாரணைக்கு உட்படுத்தியுள்ளது என்ற வகையில், ஒபாமாவின் தெரிவு மாற்றத்தின் முதலாவது படியில் அவர்களை கொண்டு வந்து விடுகிறது.

இப்போதைக்கு அவர்கள் தன்னிலை சார்ந்த நியாயங்களை முன்வைத்து தப்பித்துக் கொள்ளலாம், ஆனால் அறம் சார்ந்து சிந்திப் பவர்களுக்கு, இலங்கை நிலவரம் உறுத்தலை ஏற்படுத்திக் கொண்டிருக்கப் போகிறது.

நொவெம்பர் 4, அந்த ஒரு நாளில் நடந்த மாற்றத்தினைப் பாருங்கள், நாங்கள் வெறுத்து வந்த அமெரிக்கா உயரத்தில் நிற்கிறது. இதுவரை ஐனநாயக நாடுகளாய் எங்களுக்குத் தெரிந்த நாடுகள் எல்லாம் வெள்ளையின மேலாதிக்கம் கொண்ட நாடுகள் போலத் தோற்றமளிக்கின்றன.

பிரித்தானியாவிலும், கனடாவிலும் கறுப்புப் பிரதமர்கள் தேர்ந்தெடுக்கப்படுவது எப்போது? ஜெர்மனியில் துருக்கிய வம்சாவளியினர் ஒருவர் சான்சலராக வரமுடியாதா? அல்ஜீரிய அகதி ஒருவர் பிரான்சின் தலைவராகும் நாள் வருமா? இவை எம்முன் எழும் சில கேள்விகள். நேற்றுவரை இப்படியான கேள்விகள் எழுப்பப்பட்டனவா? அப்படி எழுப்பட்டிருந்தாலும் சாத்தியப்படாது எனப் பதிலளித்திருப்போம். இன்று இவை ஏன் சாத்தியப்படாது என திருப்பிக் கேட்கும் நிலை ஏற்பட்டு விட்டது. இதுவே மாற்றம்.

சோனியா என்ற இத்தாலியப் பெண் இந்தியாவிற்கு பிரதமராக வந்திருந்தால் இந்த மாற்றம் ஏற்பட்டிருக்காது. அவர் நேரு குடும்பத்தில் மணம் முடிக்காதிருந்தால் அவருக்கு அப்படியொரு சந்தர்ப்பம் ஏற்படப் போவதில்லை என்பதனை முழு உலகமுமே அறிந்திருக்கிறது. ஆனால் இத்தனை பெரிய இந்தியாவில் 1.13 பில்லியன் மக்களில் யார் வேண்டுமானாலும் பிரதமராகலாம் என்பது வெறுமனே அரசியல் அமைப்புச் சட்டப் புத்தகத்தில் தங்கிவிடாமல், மக்களின் மனதில் இப்போது பதிந்துவிடப்போகிறது.

இலங்கை தீவிற்கு வருவோம். தீவு முழுக்க சிங்களவருக்குச் சொந்தமானது, சிறுபான்மையினர் அவர்களுக்கு அடங்கி வாழவேண்டும் என்பதே சிங்களப் பெருமபான்மையின் நிலைப்பாடாக இன்னமும் இருக்கிறது. சிங்கள இராணுவத் தளபதி சரத் பொன்சேகா நேரடியாகச் சொல்வதும், மகிந்த இராஜபக்ச மறைமுகமாகச்சொல்வதும் இதுதான். இதனை வலியுறுத்தித்தான் சிங்கள வாக்காளர்கள் தேர்தல்களில் வாக்களிக்கிறார்கள்.

இந்த பேரினவாத மனப்பாங்கிற்கு மௌனமாக உடன்பட்டுப் போகிற தமிழர்களும் இருக்கிறார்கள். வெளிப்படையாக ஆமோதித்து சோரம் போன அரசியல் வாதிகளும் இருக்கிறார்கள். அதுவே நியாயம் அடங்கிப் போங்கள் என ஆலோசனை வழங்கிய தமிழ் 'அறிஞர்களும்' இருக்கிறார்கள். இப்படி ஆலோசனை கூறியவர்களில் ஒபாமா சட்டம் கற்ற ஹாவார்ட் பல்கலைக் கழகத்தில் கல்வி கற்ற சட்ட வல்லுனர் நீலன் திருச்செல்வம், ஒக்ஸ்போர்ட் பல்கலைக் கழகத்தில் கல்வி கற்ற சட்டவாளர் லக்ஸ்மன் கதிர்காமர் ஆகியோரும் அடங்குவர். இவர்கள் எல்லோரும் முன்னரை விட இன்னமும் குறுகிப் போனவர்களாகத் தெரிகிறார்கள்.

இப்போது நாங்கள் கேள்வி கேட்கிறோம். அமெரிக்காவில் முடியுமானால் ஏன் இங்கு முடியாது? மேற்படி வினாவிற்கு முடியும் என்று பதில் சொல்கிறார் சிறிலங்காவிற்கான அமெரிக்கத் தூதுவர் ரொபர்ட் ஒ பிளேக். பாவம் பிளேக், ஜோர்ஜ் டப்பிள்யு புஷ்ஷிற்கு உலகவிடயங்களில் உள்ள அறிவு போலவே பிளேக்கிற்கு சிறிலங்கா பற்றிய புரிதல் இருக்கிறது. ஒரு தமிழரோ, முஸ்லீமோ சிறிலங்காவிற்கு சனாதிபதியாக வருவது ஒருபக்கம் இருக்கட்டும், சிங்கள கிறிஸ்தவரோ, சிங்கள இஸ்லாமியரோ, ஏன் வேண்டாம் கரைநாட்டு சிங்கள பௌத்தரோ, சிறிலங்காவின் ஐனாதிபதியாக தெரிவு செய்வதற்கு என்ன நிகழ்தகவு இருக்கிறது என்பதையாவது அவர் அறிந்து சொல்லட்டும்.

ஈழத் தமிழர்களின் போராட்டம் மீதான சில கோழைத்தனமான கேள்விகளும் இப்போ அபத்தமாகத் தோன்றுகிறது. யார் முதல் வந்து குடியேறியது? பிறகு வந்தவர் யார்? சனத்தொகையில் எத்தனை பங்கினர் உனது இனத்தைச் சேர்ந்தவர்கள? இந்தக் கேள்விகள் அர்த்தமற்றதாகி விட்டன. சிறுபான்மையினர் என்பதால் விட்டுக் கொடுப்புக்கள் செய்ய வேண்டும் என்ற கருத்தும் அடிபட்டுப்போகிறது. இதே நிலைதான் எங்கும், இதுதான் மாற்றம்.

ஒபாமாவின் தெரிவானது உலகெங்கும் வாழும் சிறுபான்மை இனத்தவருக்கு பலத்தை கொடுத்திருக்கிறது. இனி மாற்றங்கள் தொடரப் போகின்றது என்ற நம்பிக்கை அவர்களிடம் துளிர்விடத் தொடங்கியிருக்கிறது. ஒபாமா எந்த மாற்றத்தை கொண்டு வராவிடினும், அவரது தெரிவானது உலகில் மாற்றத்தை கொண்டு வரவிருக்கிறது என்பது மட்டும் உறுதியாகத் தெரிகிறது.

அகதித் தஞ்சம் கோரி நிராகரிக்கப்பட்டிருக்கின்றீர்களா?

உங்கள் விண்ணப்பங்கள் முற்றாக நிராகரிக்கப்பட்டு நாடு கடத்தப்படும் அபாயத்தில் உள்ளீர்களா?

நாடு கடத்துவதற்காகத் தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளீர்களா?

"தமிழ் கொமியூனிற்றி நேசக் கரம் நீட்டுகின்றது"

தஞ்சக் கோரிக்கை முற்றாக நிராகரிக்கப்பட்டு, திரும்பவும் நாடு செல்ல விரும்பாத தமிழர்களை – கட்டாய நாடு கடத்தலில் இருந்து நிற்பாட்டிக் கொண்டிருக்கின்றோம்.

ஐரோப்பிய மனித உரிமை நீதிமன்றத்தில் (European Court of Human Rights) உங்கள் நாடு கடத்தலை ஐக்கிய ,ராச்சியத்திற்கு எதிராக தடை உத்தரவை பிறப்பித்து நிற்பாட்டி பிணையின்றி தடை முகாம்களிலிருந்து வெளியில் எடுத்து விடுவதில் முன்னனியில் நின்று வேலை செய்து கொண்டிருக்கும் தமிழ் கொமியூனிற்றியை உடன் அழையுங்கள்

020 8444 6655.

கடந்த 10 மாதங்களில் 130க்கும் அதிகமான தமிழர்களின் நாடு கடத்தலைத் தடுத்து, தடுப்புக் காவலில் இருந்து பிணையின்றி வெளியில் எடுத்து விட்டிருக்கின்றோம்.

இன்று 300க்கும் அதிகமான தமிழர்களை திருப்பி அனுப்புவதை தடை செய்யப்பட்டமைக்கு தமிழ் கொமியூனிற்றி தொண்டர் நிலையம்தான் முதற் காரண கர்த்தாவாக அமைந்துள்ளது.

மனச்சாட்சியற்ற, கண்ணியமற்றவர்களின் சேவையினால் பயந்த நிலையில் கவலை கொண்டுள்ளீர்களா?

"யாமிருக்கப் பயம் ஏன்?"

அழையுங்கள்:

தமிழ்க் கொமியூனிற்றி நேசக் கரம் நீட்டுகின்றோம்

0208 444 6655

தமிழர் அறங்காவற் கட்டளை
(இலக்கம்: 1117267)

tamil community
"building a better community"
CA House
28-30 Muswell Hill Broadway
London N10 3RT
Tel: 020 8444 6655
Fax: 020 8444 6244
Email: info@thamilcommunity.org
www.thamilcommunity.org